அனுப்புநர்

திரு வி. கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,
மாநில வள மற்றும் பயிற்சி மைய வளாகம்,
ஜவஹர்லால் நேரு உள்வட்ட சாலை,
கே.கே. நகர், சென்னை – 600 078.

பெறுநர்

இயக்குநர்,
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்,
சென்னை.

**ந. க. எண் 9946 / இவாததி/2012, நாள் 19.12.2012**

அய்யா,

பொருள்: மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் – மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண உதவித் திட்டம் வழங்குதல் – சில விவரங்கள் – தொடர்பாக.

பார்வை: தமிழ் நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு கடித நாள் 12.12.2012.

------

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாற்றுத் திறனாளிகள், சமூக நல துறையின் கீழ் செயல்படும் திருமண உதவித் திட்டத்தில் பயன்பெறவில்லை என்ற சான்றினை பெற வேண்டியுள்ளதால், மிகவும் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இனிவருங்காலங்களில் மேற்படி சான்றினை தவிர்க்கவும், மாற்றுத் திறனாளிகளின் அசல் திருமண பதிவு சான்றிதழ்களின் பின்பக்கத்தில் முத்திரையிட்டு, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரால் திருமண உதவி திட்ட விண்ணப்பம் பதிவு செய்த விவரம் மற்றும் நாள் குறிப்பிடும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாற்றுத் திறனாளிகள் விவரத்தினை அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தங்கள் துறையின் கீழ் திருமண உதவிகள் வழங்கும்போது அசல் திருமண உதவி சான்றுகளின் பின்பக்கத்தில் முத்திரையிட்டு மாவட்ட சமூக நல அலுவலர்களால் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்பட்டால் பயனாளிகள் இரு துறைகளிலும் திருமண நிதி உதவி பெற இயலாது. ஏதாவது ஒரு துறையில்தான் வாங்க முடியும்.

எனவே, இப்பொருள் தொடர்பாக பரிசீலனை செய்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு தகவல் அளித்து அதன் நடவடிக்கைகள் விவரம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதன்மைச் செயலர் / மாற்றுத் திறனாளிகளுக்கான
மாநில ஆணையர்

நகல்:
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள்
நல அலுவலர்கள்.